சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 188 01.01.2026 THURSDAY MARGAZHI : 17 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 188 01.01.2026 வியாழக்கிழமை மார்கழி : 17 விலை : ரூ.5/–

3 “உத்தரப் பிரதேசத்தை தமிழகத்துடன் ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடில்லை” ப.சிதம்பரம்

4 சங்கர நாராயணசுவாமி கோயிலில் சொர்க்கவாசல் திறப்பு திரளான பக்தர்கள் தரிசனம்

2 ஆபரேஷன் சிந்தூரின்போது மத்தியஸ்தம் செய்ததாக சீனா அறிவிப்பு இந்தியா திட்டவட்ட மறுப்பு

# “பிரளய் ஏவுகணை சோதனை வெற்றி”



■ தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி அவர்கள் இன்று திண்டுக்கல் மாவட்டம் வழியாக கோயம்புத்தூர் செல்லும் பயணத்தின் போது, ஒட்டன்சத்திரம் அரசு விருந்தினர் மாளிகையில் சிறிது நேரம் தங்கினார். அங்கு அவரை திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு செ. சரவணன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து மலர் கொடுத்து மரியாதையுடன் வரவேற்றார். இந்நிகழ்வின் போது திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், இ.கா.ப., அவர்கள் உடனிருந்தார். ஆளுநரின் பயணம் பாதுகாப்பாகவும் சீராகவும் நடைபெற மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்துதமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி அவர்கள் கோயம்புத்தூர் நோக்கி தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

புதுடில்லி: ஜன.1-

ஒடிசா கடற்கரையில், பிரளய் ஏவுகணையை ஏவி மேற்கொள்ளப்பட்ட சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை தளம் அமைந்துள்ளது. இந்த தளத்தில் இருந்து, இன்று காலை 10:30 மணிக்கு இரண்டு பிரளய் ஏவுகணைகள் சோதனை முயற்சியாக ஏவுப்பட்டன. ஒரே ஏவுதளத்தில் இருந்து அடுத்தடுத்து ஏவப்பட்ட ஏவுகணைகள், குறிப்பிட்ட பாதையில் பறந்து சென்று இலக்குகளை தாக்கின.

இது தொடர்பாக டிஆர்டிஓ வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து இரண்டு பிரளய் ஏவுகணைகள் ஏவி பரிசோதனை செய்யப்பட்டது. செயல்திறன் மதிப்பீடு செய்வதன்



ஒரு பகுதியாக இந்த சோதனை நடந்தது. இரண்டு ஏவுகணைகளும் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்தது.இவ்வாறு டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

உள்நாட்டு தொழில் நுட்பங்களால் உருவாக்கப்பட்ட இந்த ஏவுகணை, துல்லியம் மற்றும் அதிநவீன வழிகாட்டுதல் அமைப்புகளுக்கு பெயர் பெற்ற பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும். இது பல வகையான அணுஆயுதங்களை சுமந்து சென்று இலக்குகளை தாக்கும் திறன் பெற்றது.

இந்த ஏவுகணையை ஐதராபாத்தில் உள்ள இமாரத் ஆராய்ச்சி மையம் மற்றும் டிஆர்டிஓ அமைப்பின் ஆய்வகங்கள் இணைந்து உருவாக்கி உள்ளன. ஒடிசாவில் இன்று நடந்த சோதனையை டிஆர்டிஓ விஞ்ஞானிகள், விமானப்படை மற்றும் ராணுவத்தின் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதற்கு, விமானப்படை, டிஆர்டிஓ, ராணுவத்துக்கு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரி வித்துள்ளார். இன்று நடந்த சோதனை மூலம், ஏவுகணையின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரி வித்துள்ளார்.




## திமுக 2026ல் மாபெரும் வெற்றிபெற நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்

### ஐ.பி. செந்தில்குமார் பேச்சு

சின்னாளபட்டி, ஜன.01

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், செட்டியபட்டி ஊராட்சிக்குட்பட்ட வேளாங்கண்ணிபுரம் மற்றும் வளையபட்டி பகுதிக்கான வாக்குசாவடி முகவர்களான பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.எல்.டி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான என்வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலை குனியவிடமாட்டோம் என்ற தலைப்பில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் வேளாங்கண்ணிபுரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசசன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செட்டியபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டி.ராஜா வரவேற்றார். பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் கலந்துகொண்டு, வாக்குசாவடி முகவர்கள் மத்தியில் பேசும்போது வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் முக்கிய பங்கு உங்களுக்கு உள்ளது. வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருவது முதற்கொண்டு வாக்கு பதிவு செய்யும்வரை உங்கள் பணி முக்கியமானது. 17 வருடங்களுக்கு முன்பு வேளாங்கண்ணிபுரத்திற்கு பாதை வசதி இல்லாமல் இருந்தது. வருவாய்த்துறை அமைச்சராக ஐயா ஐ.பி.யார் அவர்கள் பாதையுடன் கூடிய சாலை வசதி அமைத்துக் கொடுத்ததால், சிரமம் இன்றி இந்த கிராமத்திற்கு வரமுடிகிறது. இங்குள்ள சிறுபான்மையின மக்கள் தொடர்ந்து திமுகவிற்கு ஆதரவு அளித்து வந்துள்ளீர்கள். ஆத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து உங்களிடம் வழங்கப் பட்ட துண்டு பிரசுரங்களை வீடு தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும் என்றார். கூட்டத்தில் ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் மெல்வின், வேளாங்கண்ணிபுரம் கிளைச் செயலாளர் வேளாங்கண்ணி, வளையபட்டி கிளைச் செயலாளர் சங்கர், அவைத்தலைவர் சவேரியார், பி.எல்2 பாண்டி, பி.எல்.சி சாமிநாதன், அமுதா, கார்த்திகா, பிரீத்தா, குழந்தைராஜ், ஜெகதீஸ், பி.டி.ஏ. வேளாங்கண்ணி, ஊர் முக்கிய பிரமுகர் அலெக்ஸ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திமுகவில் இணைந்த த.வெ.க. கட்சியைச் சேர்ந்த இளைஞர்களை என்றும் கைவிட மாட்டேன் : அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி



சின்னாளபட்டி, ஜன.01

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுப்பட்டி 9வது வார்டு, இலந்தைமரம் நாகம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த அதிமுக, பாஜக மற்றும் பிற கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் 9வது வார்டு பேரூராட்சி மன்ற திமுக உறுப்பினர் சுப்பிரமணி தலைமையில் 40 பேர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். இதுபோல முன்னிலைக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கிளைச் செயலாளர் எஸ்.ராமர் தலைமையில் அக்கட்சியைச் சேர்ந்த 20 இளைஞர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக்கொண்டனர். கட்சியில் இணைந்தவர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரி வித்து, பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், இன்று பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சியில் இணைகிறார்கள் என்றார். அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம் என்றார். ஆத்தூர் தொகுதியை பொறுத்துவரை ஒரு ரூபாய் கூட வாங்காமல் 150க்கும் மேற்பட்டோருக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம். இன்று இளைஞர்கள் அதிக அளவில் திமுகவில் இணைகிறார்கள் என்றால், அவர்களுக்கு நிச்சயம் அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையே, அவர்களையும், கழகத்தில் இணைந்தவர்களையும், ஒருபோதும் நான் கைவிட மாட்டேன் என்றார். நிகழ்ச்சி யின்போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளவீயார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன், வாஞ்சிநாதன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன் திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், சின்னாபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகுமார் (எ) மணி முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன், நாகலெட்சுமி ரமேஸ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஸ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப், சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர்கள் முத்துவேல், மெடிக்கல் கோபி, கீர்த்தனா, 9வது வார்டு திமுக உறுப்பினர் சுப்பிரமணி, அண்ணாநகர் திமுக நிர்வாகிகள் குண்டு முருகன், தாமோதரன், மாரிமுத்து உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## “தமிழ் பிரஸ் கிளப்” அமைப்பின் 2026 ஆம் ஆண்டுக்கான அடையாள அட்டை வழங்கல்



சென்னை, ஜன.1-

தமிழ் பிரஸ் கிளப்" என்ற பத்திரிகையாளர் அமைப்பானது, அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து பொதுநல அமைப்பாகவும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடந்த 9 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

அமைப்பின் 2026 ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் சேர்க்கை மற்றும் மகளிர் பிரிவு, வர்த்தக பிரிவு முதலான அனைத்து பிரிவுகளுக்கும் சிறப்பு உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் நியமனம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட "சக்கர வியூகம்" பத்திரிகை செய்தியாளர் மகேந்திரன் மற்றும் "சென்னை இதழ்" பத்திரிக்கை செய்தியாளர் மனோகரன் ஆகியோருக்கு, 2026 ஆம் ஆண்டுக்கான "தமிழ் பிரஸ் கிளப்" அடையாள அட்டையினை அவினாசி அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் விமலா வழங்கி கௌரவித்தார்.

தமிழ் பிரஸ் கிளப்" அமைப்பில் பத்திரிகையாளர்களும், சமூக ஆர்வலர்களும், மகளிர், வர்த்தகர்கள் மற்றும் அனைத்து தரப்பினரும் உறுப்பினராக 88705 00000 / 99446 16559 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு இணைந்து கொள்ளலாம் என அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் பத்திரிகையாளர் பால் பாண்டியன் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.



# ''காங்கிரஸ் விவகாரத்தில் தோழமை கட்சிகள் தலையிட வேண்டாம்'' செல்வப்பெருந்தகை

சென்னை, ஜன.1-

காங்கிரஸ் விவகாரத்தில் தோழமைக் கட்சிகள் தலையிட வேண்டாம் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி தவெக தலைவர் விஜய்யை சந்தித்துப் பேசியிருந்தார். இச்சமபவம் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இதனால் திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி விலக உள்ளதாக தகவல் வெளியானது. இதையொட்டி, காங்கிரஸ் தலைமை தரப்பில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இருப்பினும் திமுக கூட்டணி கட்சிகள் இவ்விவகாரம் குறித்து பொதுவெளியில் பேசி வந்தது சர்ச்சையானது.

இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப் பெருந்தகை செய்தியாளர்களிடம் பேசியதாவது, ''எங்கள் கட்சி பிரச்சினையை நாங்கள் பேசி தீர்த்துக்கொள்வோம். தமிழ்நாடு அரசுக்கு எதிராகவோ, பாஜகவுக்கு ஆதரவாகவோ யாராவது பேசினால் அந்தப் புகாரை எங்கள் தலைமையிடம் தெரிவிப்போம், தெரிவித்து விட்டோம். இது குறித்து அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என முழுமையாக நம்புகிறோம்.

திமுக காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும், தோழமை கட்சிகளும் உட்கட்சி விவகாரத்தில் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம். தோழமைக் கட்சிகள் இதை இத்தோடு விட்டுவிட வேண்டும். இதை பெரிதுப்படுத்த வேண்டாம்'' என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ''ஒரு கூட்டணி கட்சியின் உட்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது. சிபிஐ, சிபிஎம் ஆகியவற்றின் தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும், கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வைகோ, திருமாவளவன் ஆகியோர் கூட்டணி கட்சிகளுடன் நடக்கும் விஷயங்களில் ''லக்ஷ்மண் ரேகை''யை மதிக்குமாறு தங்களது எம்.பிக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்'' என காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் வலியுறுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வானிலை முன்னறிவிப்பு: சென்னையில் பனிமூட்டம் நிலவ வாய்ப்பு

சென்னை, ஜன.1-

தமிழகத்தில் நாளை முதல் 3 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஜன.1) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், 2ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 2ம் தேதி தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

4 முதல் 6ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஜன.2 முதல் 4ம் தேதி வரை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக் கூடும்.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) அளவுகளின்படி அதிகபட்சமாக சமவெளிப் பகுதியான தருமபுரியில் 18.5 டிகிரி செல்சியஸ், மலைப்பகுதியான கொடைக்கானல் மற்றும் உதகமண்டலத்தில் 9.4 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் ஜன.2 முதல் 4ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திம்பம் மலைப்பாதையில் டீசல் இல்லாமல் நின்ற லாரியால் போக்குவரத்து பாதிப்பு

ஈரோடு, ஜன.1-

ஈரோடு மாவட்டம் தாளவாடி அடுத்த திம்பம் மலைப்பகுதி தமிழகம் கர்நாடகாவை இணைக்கும் மிக முக்கிய போக்குவரத்து பகுதியாக இருந்து வருகிறது. திம்பம் மலைப்பகுதியில் உள்ள 27 கொண்டை ஊசி வளைவுகள் வழியாக தினசரி ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன. குறிப்பாக தமிழகம் கர்நாடகா இடையே சரக்கு போக்குவரத்து அதிக அளவில் நடைபெற்று வருகிறது.இந்நிலையில் நேற்று காலை திம்பம் மலைப்பாதையில் டீசல் இல்லாமல் பழுதாகி நின்ற லாரியால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. திம்பம் மலைப்பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதால் தமிழகம் கர்நாடக மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் வாகன ஓட்டிகள் மற்றும் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் கடும் அவதி அடைந்தனர். சுமார் 3 மணி நேர போக்குவரத்து நெரிசலுக்கு பின் போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வாகனங்கள் மெதுவாக நகர்ந்து சென்றன.

# ஆபரேஷன் சிந்தூரின்போது மத்தியஸ்தம் செய்ததாக சீனா அறிவிப்பு இந்தியா திட்டவட்ட மறுப்பு

புதுடெல்லி, ஜன.1-

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை எடுத்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ததாக சீனா கூறி உள்ள நிலையில் இந்தியா அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது.கடந்த ஏப்ரல் 22ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்தது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இந்தியா அந்த நாட்டுக்கு எதிராக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் குறிவைக்கப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டன. இதில், ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, இந்தியா மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தியா கொடுத்த பதிலடியில் அந்த நாட்டின் விமானப் படைத் தளம் கடுமையாக சேதமடைந்தது. இந்தியாவின் பதிலடி தீவிரமாக இருந்ததை அடுத்து, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் (டிஜிஎம்ஓ), இந்திய டிஜிஎம்ஓவை தொடர்பு கொண்டு போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகோள்



விடுத்தார். இதை இந்தியா ஏற்றது. இதையடுத்து, போர் முடிவுக்கு வந்தது. இதை இந்திய ராணுவம் அப்போதே செய்தியாளர்களிடம் விளக்கியது.எனினும், இந்தியா பாகிஸ்தான் போரை தான் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பலமுறை கூறினார். எனினும், இந்திய வெளியுறவுத் துறை அதனை தொடர்ந்து மறுத்து வருகிறது. இந்நிலையில், போரின்போது பாகிஸ்தானுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவிய சீனா, இந்தியா பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வர தாங்கள் மத்தியஸ்தம் செய்ததாக கூறி உள்ளது.

நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி, ''இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முன் எப்போதும் இல்லாத அளவாக இந்த ஆண்டு உள்ளூர் போர்களும் எல்லை தாண்டிய மோதல்களும் அடிக்கடி வெடித்தன. நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் சீனா தொடர்ந்து ஈடுபட்டது. வடக்கு மியான்மர், ஈரான் அணுசக்திப் பிரச்சினை, இந்தியா பாகிஸ்தான் இடையேயான பதட்டம், இஸ்ரேல் பாலஸ்தீனம் பிரச்சினை, கம்போடியா தாய்லாந்து பிரச்சினை ஆகியவற்றில் நாங்கள் மத்தியஸ்தம் செய்தோம்'' என்று கூறி இருந்தார். வாங் யியின் கூற்றை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. ''இதுபோன்ற கூற்றுக்களை நாங்கள் ஏற்கனவே மறுத்துள்ளோம். இந்தியா பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு பிரச்சினைகளில் மூன்றாம் தரப்புக்கு எந்த பங்கும் இல்லை. இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தம் என்பது இரு நாடுகளின் டிஜிஎம்ஓக்களுக்கு இடையே நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இது குறித்து எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் பலமுறை தெளிவுபடுத்திவிட்டோம்'' என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது









■ திருப்பூர் மாவட்டம் அவினாசி வட்டம் அம்மாபாளையம், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ காமாட்சி அம்மன், ஸ்ரீ மாகாளியம்மன், ஸ்ரீ கருப்பராயர் ஆகிய தெய்வங்களுக்கு பொங்கல் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. திருவிழாவில் படைக்கலம் எடுத்தல், கும்பம் எடுத்தல், தேர் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

# ''தமிழகத்தில் கஞ்சாவே இல்லையா?'' மா.சுப்பிரமணியத்துக்கு இபிஎஸ் சரமாரி கேள்வி

சென்னை, ஜன.1-

'''தமிழகத்தில் கஞ்சாவே இல்லை' என்று வெட்கமே இன்றி கூறும் அமைச்சர் மா.சுப்பிரமணியத்துக்கு, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இருந்த 3 அடி கஞ்சா செடி தெரியவில்லையா?'' என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், ''திருத்தணி ரயில் நிலையத்தில் நின்றுக் கொண்டிருந்த ஒரு சாமானியர் மீது 2 இளைஞர்கள் சரமாரியாக தாக்கியதாக செய்திகள் வருகின்றன. அதேபோல், திருப்பூரில் போதை இளைஞர் ஒருவர், காவலரை கத்தியுடன் நடுரோட்டில் விரட்டிய செய்தியும் அதிர்ச்சி அளிக்கின்றன.

போதைப் பொருள் புழக்கமும், போதை இளைஞர்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்கு சீர்கேடும் தினசரி செய்தியாகி





இருப்பதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் முதல்வர்? அடுத்த நொடி யார், எந்த போதையில் நம்மைத் தாக்கப் போகிறார் என்ற உயிர் பயத்திலேயே தமிழக மக்கள் வாழ வேண்டுமா?

'தமிழ்நாட்டில் கஞ்சாவே இல்லை' என்று வெட்கமே இன்றி கூறும் மாரத்தான் அமைச்சருக்கு (மா.சுப்பிரமணியம்), ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இருந்த 3 அடி கஞ்சா செடி தெரியவில்லையா?

கடந்த ஒரு வாரத்தில் மட்டும், நாகப்பட்டினத்தில் 140 கிலோ, ராமநாதபுரத்தில் 564 கிலோ, திருச்சியில் 4 கிலோ என தமிழகத்தில் பிடிப்பட்டுள்ள கஞ்சா குறித்த செய்திகள் எல்லாம் இந்த அமைச்சருக்கும், அவரின் தலைவரான முதல்வருக்கும் தெரியாதா என்ன?

போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், சட்டம் ஒழுங்கைக் காக்க முடியவில்லை என்றால், எதற்கு நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள்?

நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியாத திறனற்ற முதல்வரிடம் சிக்கித் தமிழ்நாடு தவித்தது போதும். 2026, திமுக ஆட்சியிடம் இருந்து தமிழகம் விடுதலை பெறும் ஆண்டாக அமையட்டும்!'' என்று அவர் தெரிவித்துள்ளார்.




# உலகில் முதலாவதாக கிரிபாட்டி தீவில் பிறந்தது ஆங்கிலப் புத்தாண்டு: மக்கள் கொண்டாட்டம்

ஆக்லாந்து:, ஜன.1-

பசிபிக் கடலில் உள்ள கிரிபாட்டி தீவுகளிலும், அடுத்து நியூசிலாந்திலும் ஆங்கிலப் புத்தாண்டு பிறந்தது. மக்கள் பட்டாசு வெடித்தும் இனிப்புகளை வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.

ஆங்கில புத்தாண்டு 2026ஐ வரவேற்க உலகம் முழுவதும் மக்கள் தயாராக உள்ளனர். சூரியன் முதலில் உதயமாகும் பசுபிக் தீவான கிரிபாட்டியில் ஆங்கிலப் புத்தாண்டு இன்று முதலில் பிறந்தது. அந்தத் தீவில் உள்ள கிறிஸ்துமஸ் நகரில் ஆங்கிலப் புத்தாண்டு பிறந்ததை தொடர்ந்து அப்பகுதி மக்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடினர். இதனைத் தொடர்ந்து நியூசிலாந்திலும் ஆங்கிலப் புத்தாண்டு பிறந்தது.

நியூசிலாந்து

நியூசிலாந்து நாட்டின் ஆக்லாந்து நகரில் புத்தாண்டு பிறந்ததும், நகரின் மையப்பகுதியில் வண்ண வாண வேடிக்கைகள் ஒளி வெள்ளம் பாய்ச்சின. நகர வீதிகளில் மக்கள் உற்சாகமாக ஆங்கிலப்புத்தாண்டை கொண்டாடினர்.

# 2025ல் இந்தியாவில் நடைபெற்ற மாற்றங்கள், சாதனைகளை பட்டியலிட்டு சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவு

புதுடெல்லி, ஜன.1-

2025ம் ஆண்டு நிறைவை ஒட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி நேற்று விரிவான பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: நாட்டின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளாக பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு 2025ம் ஆண்டில் மிகப் பெரிய சீர்திருத்தங்கள் அமல் செய்யப்பட்டன. இது, இந்தியாவின் ஆண்டாக நினைவு கூரப்படும்.

குறிப்பாக 2025ம் ஆண்டில் ஜிஎஸ்டி வரி விகிதத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. 5% மற்றும் 18% என்ற இரு விகிதங்கள் மட்டும் அமல் செய்யப்பட்டு உள்ளன. இதனால் அனைத்து வீடுகளிலும் பட்ஜெட் சுமை குறைந்திருக்கிறது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறு



வனங்கள், விவசாயிகள் நிறைவான பலன்களை அடைந்து வருகின்றனர். பண்டிகை காலங்களில் அனைத்து பொருட்களின் விற்பனையும் கணிசமாக அதிகரித்தது.

2025ம் ஆண்டில் தனிநபர் வருமான வரி விலக்கு உச்ச வரம்பு ரூ.12 லட்சமாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. வருமான வரிச் சட்டம் 1961க்கு பதிலாக வருமான வரிச் சட்டம் 2025 நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன் மூலம் வரி நடைமுறையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டு உள்ளது.ரூ.100 கோடி வரை வருமானம் ஈட்டும் நிறுவனங்கள், சிறு நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. இந்திய காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

கடல்சார் வணிகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் 5 முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இதன் மூலம் கடல்சார் வணிகம் கணிசமாக அதிகரிக்கும். காலத்துக்கு பொருந்தாத 71 பழைய சட்டங்கள் நீக்கப்பட்டு உள்ளன.

நாடு முழுவதும் எளிதாக வணிகம் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக மின்னணு, ஆட்டோ மொபைல் உட்பட பல்வேறு துறைகளில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து, ஏற்றுமதியும் கணிசமாக அதிகரித்து வருகிறது.

29 பழைய தொழிலாளர் சட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, புதிதாக 4 தொழிலாளர் சட்டங்கள் அமல் செய்யப்பட்டு உள்ளன. இதன்மூலம் பெண்கள், அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு உள்ளன. அதேநேரம் தொழில் துறையின் வளர்ச்சியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய அணு சக்தி துறையில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க வகை செய்யும் புதிய அணுசக்தி சட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் இந்திய அணு சக்தி துறை அபார வளர்ச்சி அடையும். ஹைட்ரஜன் எரிசக்தி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

புதிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டம் (ஜி ராம் ஜி) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஊரக பகுதி மக்களுக்கான வேலைவாய்ப்பு 100 நாட்களில் இருந்து 125 நாட்களாக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

யுஜிசி, ஏஐசிடிஇ, என்சிடிஇ உள்ளிட்ட உயர் கல்வி அமைப்புகளை ஒன்றிணைத்து இந்திய உயர் கல்வி ஆணையம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும்.

மத்திய அரசின் சீர்திருத்தங்களால் சிறு வணிகர்கள், இளம் தொழில்நுட்ப நிபுணர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்க மக்கள் என அனைத்து தரப்பினரும் பலன் அடைந்து வருகின்றனர். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

# “உத்தரப் பிரதேசத்தை தமிழகத்துடன் ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடில்லை” ப.சிதம்பரம்

சென்னை, ஜன.1-

“இந்தியாவிலேயே தமிழகம்தான் வளர்ச்சியில் முதலிடம் வகிக்கிறது என மத்திய அரசின் நிதி ஆயோக் தெளிவாக குறிப்பிடுகிறது. ஆனால், தோழர் ஒருவர் உத்தரப் பிரதேசத்தை தமிழகத்துடன் ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடில்லை” என முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். காங்கிரஸின் பிரவீன் சக்கரவர்த்தியின் கருத்துக்கு எதிர்வினையாற்றும் வகையில் ப.சிதம்பரம் இவ்வாறு கூறியுள்ளார்.

ப.சிதம்பரம் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “பிப்ரவரி மாதமே தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த அறிவிப்பு வர வாய்ப்பு உள்ளது. மார்ச் இறுதி அல்லது ஏப்ரல் தொடக்கத்தில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கலாம். நல்ல தேர்தல் அனுபவம் உள்ள இண்டியா கூட்டணியே வெல்லும். ஆட்சியில் பங்கு, கூட்டணி ஆட்சி குறித்து திமுக, காங்கிரஸ் தலைவர்கள் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு.

இண்டியா கூட்டணி மேலும் வலுவடையும். காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்படும் என திமுக தலைமை மற்றும் காங்கிரஸ் தலைமை இணைந்து முடிவு செய்யும்.

இந்தியாவிலேயே தமிழகம் தான் வளர்ச்சியில் முதலிடம் என மத்திய அரசின் நிதி ஆயோக் தெளிவாக குறிப்பிடுகிறது. ஆனால், தோழர் ஒருவர் உத்தரப் பிரதேசத்தை தமிழகத்துடன் ஒப்பிடுவதில் எனக்கு உடன்பாடில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கிறது. அதை வெளியே சொல்லவேண்டிய அவசியம் இல்லை. மெத்த படித்தவர்களுடன் நான் பொதுவெளியில் விவாதிக்க விரும்பவில்லை.

ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியது மிகப் பெரிய இமாலயப் பிழை. இதை காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது. பெரியார் ஏற்படுத்தியது சரித்திரப் புரட்சி. இதை காலத்தால் அழிக்க முடியாது.

விஜய் முயற்சி வெல்லாது. இண்டியா கூட்டணிதான் வெல்லும் என முழு நம்பிக்கை இருக்கிறது. ஆட்சியில் பங்கு, கூட்டணி ஆட்சி என்பது குறித்து மற்றவர்கள் தங்களது கருத்தை சொல்லலாம். ஆனால், தலைமை



தான் முடிவு செய்யும். தனிமனிதனின் பேச்சு வேறு, கட்சியின் முடிவு வேறு. இது சர்வாதிகார நாடு கிடையாது” என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பிரவீன் சக்கரவர்த்தி கருத்தும் சர்ச்சையும்: காங்கிரஸ் கட்சியின் தரவுகள் பகுப்பாய்வு பிரிவு தலைவரும், ராகுல் காந்தியின் நண்பருமான பிரவீன் சக்கரவர்த்தி தனது எக்ஸ் தள பக்கத்தில், உத்தரப் பிரதேச மாநிலத்தை விட தமிழகம் அதிக கடன் வாங்குவதாக கருத்து தெரிவித்திருந்தார். இது திமுக காங்கிரஸ் கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறும்போது, “பிரவீன் சக்கரவர்த்தி ஒரு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தில் நடக்கும் பாஜக ஆட்சியை தூக்கி பிடித்து, தமிழகத்தில் நடைபெறும் திமுக தலைமையிலான இண்டியா கூட்டணி ஆட்சியை தாழ்த்தி பேசுவதை, விமர்சிப்பதை ஒருபோதும் தமிழ்நாடு காங்கிரஸ் அனுமதிக்காது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தின் மீது பாஜக, ஆர்எஸ்எஸ் படையெடுப்பது போன்று, பிரவீன் சக்கரவர்த்தியும் படையெடுப்பது ஏன் என்பது புரியவில்லை. இது தேவையில்லாத வேலை. தமிழ்நாடு காங்கிரஸுக்கு தலைவராக நான் இருக்கிறேன். அகில இந்திய பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் இருக்கிறார்.

தமிழகத்தில் அரசியல் செய்ய பிரவீன் சக்கரவர்த்திக்கு விருப்பம் இருந்தால் என்னிடம் சொல்லி இருக்கலாம். அவர் உத்தரபிரதேச பாஜக ஆட்சியை புகழ்ந்து பேசுவதை வன்மையாக கண்டிக்கிறேன். பிரவீன் சக்கரவர்த்தி மீது புகார் தெரிவித்து காங்கிரஸ் தலைமைக்கு கடிதம் எழுதி இருக்கிறேன். தலைமை உரிய நடவடிக்கை எடுக்கும்” என்று செல்வப்பெருந்தகை கூறியது குறிப்பிடத்தக்கது.

அப்பாவு விவரிப்பு: இதனிடையே, தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, “காங்கிரஸ் கட்சியின் பிரவீன் சக்கரவர்த்தி தமிழகத்தின் கடன் குறித்து பேசியுள்ளார். தமிழகத்தை உத்தரப் பிரதேசத்துடன் ஒப்பிட முடியாது. கல்வி, தொழில், ஜிஎஸ்டி பங்களிப்பு என அனைத்திலும் தமிழகமே முதன்மையான இடத்தில் உள்ளது. தமிழகம் வழங்கும் 1 ரூபாய் ஜிஎஸ்டிக்கு மத்திய அரசு வெறும் 29 பைசாவை மட்டுமே திருப்பித் தருகிறது. ஆனால், உத்தரப் பிரதேசத்துக்கு 2 ரூபாய் 29 பைசா வழங்குகிறது.

2011ல் கருணாநிதி ஆட்சியை விட்டுச் செல்லும்போது கடன் ரூ.1 லட்சம் கோடியாக இருந்தது. 2021ல் அதிமுக ஆட்சியை விட்டுச் சென்றபோது ரூ.5.18 லட்சம் கோடியாக உயர்ந்தது. தற்போது கடன் ரூ.9 லட்சம் கோடியாக இருந்தாலும், தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 16 சதவீதமாக உயர்ந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பிறகு 67 ஆண்டுகளில் மத்திய அரசின் கடன் ரூ.55 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் பாஜக ஆட்சியில் கடன் ரூ.185 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரூ.16 லட்சம் கோடி கடனைத் தள்ளுபடி செய்யும் மத்திய அரசு, ஏழை மக்களுக்கான திட்டங்களை விமர்சிக்க கூடாது” என்று அவர் தெரிவித்தும் கவனிக்கத்தக்கது



# குடியரசு தின விழாவில் முதல் முறை; விலங்கின அணிவகுப்பு ஏற்பாடு

டில்லி, ஜன.1-

குடியரசு தின விழாவில், முதன்முறையாக இந்திய ராணுவத்தின் கால்நடை பயிற்சிப் பிரிவில் இடம் பெற்றுள்ள விலங்குகளின் அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அணிவகுப்பில் ஒட்டகங்கள், குதிரைகள், நாய்கள் இடம்பெறுகின்றனர்.

டில்லியில் குடியரசு தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, முப்படைகளின் அணிவகுப்பும், மாநிலங்கள், மத்திய அரசு துறைகளின் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடத்தப்படுகிறது. இதில், மாநில அரசுகளின் சாதனைகள், பாரம்பரியங்களை விளக்கும் வகையில், அலங்கார ஊர்திகள் அனுமதிக்கப்படுகின்றன.

வரும் ஜனவரி 26ம் தேதி நடக்கவுள்ள குடியரசு தின விழா அணிவகுப்பில், தமிழக அரசின் அலங்கார ஊர்தி உட்பட, 9 மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் பங்கேற்க, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 'பசுமை மின் சக்தி' என்ற தலைப்பில், தமிழக அரசின் அலங்கார ஊர்தி இடம்பெறவுள்ளது.

முதன்முறையாக இந்திய ராணுவத்தின் கால்நடை பயிற்சி பிரிவில் இடம் பெற்றுள்ள விலங்குகளின் அணிவகுப்பு நடைபெறவுள்ளது. இந்த அணிவகுப்பில் இரண்டு பாக்ட்ரியன் ரக ஒட்டகங்கள், நான்கு ஜான்ஸ்கர் ரக குதிரைகள், நான்கு வேட்டையாடும் பறவைகள், பத்து இந்திய இன நாய்கள் மற்றும் ஏற்கனவே சேவையில் உள்ள ஆறு வழக்கமான நாய்கள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை காரை முற்றுகையிட்ட தொகுதி மக்கள்

சென்னை, ஜன.1-

காஞ்சிபுரம், கோட்டூர் பகுதிக்கு சென்ற காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை காரை வழிமறித்து, அவரது தொகுதி மக்கள் முற்றுகையிட்டனர். சாலை, குடிநீர், பாதாள சாக்கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரவில்லை என மக்கள் ஆவேச கேள்விகளை எழுப்பினர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீ பெரும்புதூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கோட்டூர் கிராமத்திற்கு, அந்த தொகுதி எம்எல்ஏயும், தமிழக காங்கிரஸ் தலைவருமான செல்வப்பெருந்தகை நேற்று இரவு சென்றிருந்தார். அவர் வந்திருப்பதை அறிந்து அங்கு திரண்ட ஊர் மக்கள், அவரது காரை வழிமறித்து முற்றுகையிட்டனர். உடனே அந்த பகுதியில் இருந்து காரில் விரைந்து செல்ல செல்வப்பெருந்தகை முயற்சி செய்தார்.

கூடியிருந்த மக்கள் காரை சூழ்ந்து கொண்டு, 'எம்எல்ஏ ஆகி இத்தனை நாட்கள் வராமல் தேர்தல் நெருங்கும் வேளையில் வந்தது ஏன்' என சரமாரியாக கேள்வி எழுப்பினர். சாலை, குடிநீர், பாதாள சாக்கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர். மக்கள் சூழ்ந்து கொண்டு கேள்விகளால் துளைத்ததால் தர்மசங்கடத்திற்கு ஆளான செல்வப்பெருந்தகை காரில் திரும்பி சென்றுவிட்டார்.

எம்எல்ஏவிடம் பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. தேர்தல் நெருங்கும் சூழலில் மக்கள் அதிருப்தியில் இருப்பது அரசியல் வட்டாரங்களில் பேசும் பொருளாகி உள்ளது



# சென்னையில் இடைநிலை ஆசிரியர்கள் 6வது நாளாக போராட்டம்

சென்னை, ஜன.1-

சென்னை எழும்பூரில் உள்ள கல்வி அலுவலகம் அருகே 6வது நாளாக இன்றும் (டிசம்பர் 31) இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர்.

சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தொடக்க பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள், சென்னையில் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். சென்னை எழும்பூர் காந்தி இர்வின் சாலை அருகே, வட்டார கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு இன்றும் 6வது நாளாக போராட்டம் நடத்தினர்.

காந்தி இர்வின் மேம்பாலத்தின் ஒருபுறத்தில், இடைநிலை ஆசிரியர்கள் அமர்ந்து போராட்டம் நடத்தினர். தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது, இடைநிலை ஆசிரியர்களை, ஸ்டாலின் சந்தித்த புகைப்படத்தை துண்டு பிரசுரமாக தயாரித்து, அதில், 'கரம் பிடித்து சொன்னீர்களே, கண்ணீர் துடைப்பேன் என்று; காத்திருக்கிறோம், எப்போது வருவீர்கள் எங்கள் முதல்வரே' என்ற வாசகத்தை அச்சிட்டுள்ளனர். அதை கையில் ஏந்தி, ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.



# புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு தயாராகும் தலைநகரம்; சென்னையின் அனைத்து மேம்பாலங்களும் மூடல்

சென்னை, ஜன.1-

புத்தாண்டை விபத்தில்லாமல் கொண்டாடும் வகையில் சென்னையில் உள்ள அனைத்து மேம்பாலங்களும் மூடப்படுகின்றன.

ஆங்கில புத்தாண்டை வரவேற்க அனைத்து தரப்பினரும் தயாராகி வருகின்றனர். பிடித்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அனைவருக்கும் வாழ்த்துகளை விரும்பியவர்கள் அனுப்பி வருகின்றனர்.

சென்னை மட்டுமல்லாது திருச்சி, மதுரை, கோவை, நெல்லை என அனைத்து நகரங்களிலும் கொண்டாட்டங்கள் தொடங்கி உள்ளன. ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்தை விபத்தில்லாத கொண்டாட்டமாக கொண்டாட தமிழக காவல்துறை பல்வேறு முக்கிய முன் எச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்து உள்ளது.

அதன் ஒரு கட்டமாக சென்னையில் உள்ள அனைத்து மேம்பாலங்களும் மூடப்படுவதாக பெருநகர காவல்துறை அறிவித்துள்ளது. புத்தாண்டை விபத்தில்லாமல் கொண்டாட சென்னையின் அனைத்து மேம்பாலங்களும் இன்று (டிச.31) இரவு 10 மணி முதல் நாளை (ஜன.1) காலை 6 மணி வரை மூடப்படும் என்று அறிவித்துள்ளது

மேலும், மது அருந்திவிட்டு அதிவேகத்தில் மக்களுக்கு இடையூறு செய்யும் வண்ணம் வாகனங்கள் ஓட்டுவோரை பிடிக்க மாநகரம் முழுவதும் தானியங்கி கேமராக்களும் பொருத்தப்பட்டு உள்ளதாக காவல்துறை கூறி உள்ளது.

# குற்றவாளிகளுக்கு அரசு ஊக்கம் அளிக்கிறது: அண்ணாமலை குற்றச்சாட்டு

சென்னை, ஜன.1-

திருத்தணியில் வட மாநில வாலிபர் தாக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து, வியாபாரி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகளுக்கு தமிழக அரசு ஊக்கம் அளிப்பதால் தான் இப்படி சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதாக பா.ஜ., முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை: திருத்தணி ரயில் நிலையம் அருகே உள்ள குடியிருப்பு பகுதியில் வட மாநில இளைஞர் சுராஜ் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் ஏற்பட்ட காயங்கள் இன்னும் ஆறாத நிலையில், திருத்தணியில் நேற்று மற்றொரு வன்முறைச் சம்பவம் அரங்கேறியுள்ளது. ஜமால் என்ற உள்ளூர் தொழிலதிபர், எந்தவித காரணமும் இன்றி ஒரு கும்பலால் தாக்கப்பட்டார். இது இனி ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல; கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் இது ஒரு கவலைக்குரிய போக்காக மாறியுள்ளது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. குற்றவாளிகளுக்கு அரசு ஊக்கம் அளிக்கிறது.

சாதாரண குடிமக்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். திமுக ஆட்சியின் கீழ், பொதுப் பாதுகாப்பு சீர்குலைந்துவிட்டது. சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் தனது முழுமையான தோல்வியை திமுக ஒப்புக்கொள்வதற்கு முன்பு, இன்னும் எத்தனை பேர்பாதிக்கப்பட வேண்டும்? இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# திமுக கூட்டணி மோதல் வெட்டவெளிச்சம்; விசிக., கம்யூ., மதிமுக.,வுக்கு காங்., எம்.பி., எச்சரிக்கை

சென்னை, ஜன.1-

'மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், மதிமுக ஆகியவை, லட்சுமண ரேகையை மதித்து நடக்க வேண்டும்,' என்று காங்கிரஸ் எம்.பி., மாணிக்கம் தாகூர் வெளியிட்ட அறிக்கை, திமுக கூட்டணியில் இருக்கும் மோதலை வெளிக்காட்டுவதாக உள்ளது.

அவரது அறிக்கை: விடுதலை சிறுத்தைக்கட்சி, மதிமுக, கம்யூ., கட்சிகள் ஆகியோர், எதிர்கட்சி தலைவர் ராகுலிடம் காங்கிரஸ் கட்சியின் ஒரு நிர்வாகியைப் பற்றி புகார் கூறிய செய்தி படித்தேன்.



இது, ஒரு அடிப்படை கேள்வியை எழுப்புகிறது.

காங்கிரஸ் தனது உள்கட்சி விஷயங்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூட்டணி கட்சிகள் உத்தரவிடத் தொடங்கியது எப்போது? தங்களது உள்கட்சி விஷயங்களில் இதுபோன்ற பொது கருத்துக்களை இக்கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களா?

விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.பி., ரவிக்குமார், மதிமுகவின் துரை வைகோ, மார்க்சிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் ஆகியோரிடம் “உங்கள் கட்சி உறுப்பினர்களை இப்படிச் சமாளியுங்கள்” என்று சொன்னால், அவர்கள் அதை சகிப்பார்களா?

**கூட்டணி ஒழுக்கம்**

கூட்டணிகள் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் உருவாகின்றன. பொது அழுத்த அரசியலால் அல்ல. ஏதேனும் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவை ஊடக அறிக்கைகள் மூலம் அல்ல; கூட்டணி மேடைகளுக்குள் பேசப்பட வேண்டும்.

ஒரு கூட்டணி கட்சியின் உள்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது; இது பாஜ., ஆர்எஸ்எஸ் அமைப்புகளுக்கு எதிரான கூட்டு வலிமையையே பலவீனப்படுத்தும். இது கட்சி செயல் வீரர்களின் தன்மான உணர்வை தூண்டும்.கம்யூ., தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும் , கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**லக்ஷ்மண் ரேகை**

அதேபோல், துரை வைகோ, திருமாவளவனும் கூட்டணி கட்சிகளுடன் நடக்கும் விஷயங்களில் “லக்ஷ்மண் ரேகை”யை மதிக்குமாறு தங்களது எம்.பிக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமை என்பதன் அர்த்தம் மவுனம் அல்ல. ஆனால் அது கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் குறிக்கிறது. கூட்டணி தர்மம் அனைவருக்கும் சமமாகவே பொருந்த வேண்டுமே ஒழிய அது காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் அல்ல. இவ்வாறு மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

# சங்கர நாராயணசுவாமி கோயிலில் சொர்க்கவாசல் திறப்பு திரளான பக்தர்கள் தரிசனம்



சங்கரன்கோவில், ஜன.01

சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி 30.12.2025. அன்று. செவ்வாய் கிழமை சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. தென்காசி மாவட்டம்

சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோயிலில் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு 5 நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். 3 நிகழாண்டில் இந்நிகழ்ச்சி ல் செவ்வாய்கிழமை ம் நடை பெற்றது. இதையொட்டி காலை அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு சயன கோலத்தில் இருந்த பள்ளி கொண்டபெருமாளுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் + ஆராதனை நடைபெற்றது. பின்னர் கோயில் உள்பிரகாரத்தில் வீதியுலா வந்த பள்ளிக்கொண்டபெருமாள் 8.30 மணிக்கு சரியாக வடக்குமாடவீதியில் சொர்க்கவாசல் வழியாக வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். 1 இதைத்தொடர்ந்து பள்ளிக்கொண்ட பெருமாள் வடக்குரதவீதிக்கு வந்ததும் ஏற்கனவே வீதி சுற்றி அங்கு வந்து நின்ற பெரியாழ் வாருக்கும் பள்ளிக்கொண்ட பெருமாளுக்கு ஒருசேர சிறப்புத் தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசித்தனர். இதைத்தொடர்ந்து ரதவீதி சுற்றி பள்ளிகொண்ட பெருமாள் கோயிலுக்குத் திரும்பினார். ஏற்பாடுகளை கோயில்நிர்வாகத்தினர் மற்றும் மண்டகப்படிதாரர்கள் செய்திருந்தனர்.

## தென்காசி வாசுதேவநல்லூர் ஆத்துவழி குளத்தில் மீனவர் நலத்துறை சார்பில்

# மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்



தென்காசி, ஜன.01-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் (2025 - 2026) ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில், தமிழ்நாட்டில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரிக்கும் விதமாக 5000 ஹெக்டேர் அளவிலான பஞ்சாயத்து குளங்களில் ஒரு ஹெக்டேருக்கு 2000 மீன் குஞ்சுகள் வீதம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளது. அதாவது 400 ஹெக்டேரில் 8 இலட்சம் மீன் விரலிகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட வாசுதேவநல்லூர் மற்றும் சங்கரன் கோவில் பகுதியில் உள்ள 400 ஹெக்டேர் அளவிலான ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்கள் தேர்வு செய்யப்பட்டு மீன் விரலிகள் இருப்பு செய்யப்படும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்துவத ற்கு உதவிகரமாக இரு க்கும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே கமல்கி ஷோர் தெரிவித்தார். இந்நிகழ்வில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (மண்டலம்) தூத்துக்குடி, இணை இயக்குநர் இளம்வழுதி, திருநெல்வேலி, உதவி இயக்குநர், ப.மோகன்ராஜ், (தென்காசி), ஆய்வாளர், சு.பாலமுருகன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கப்பல் பட்டியில் காய் காத்து பூத்துக் குலுங்கிய புளியமரம் - சமத்துவ பொங்கல் வைத்து பொதுமக்கள் வழிபாடு

திண்டுக்கல், ஜன.01-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதி சிக்கம நாயக்கன்பட்டி ஊராட்சி கப்பல் பட்டியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் அமைச்சர், பசுமை நாயகர் அர. சக்கரபாணி அவர்களின் பொற்கரங்களால் இரண்டு வருடங்களுக்கு முன்பாக நாவல் மரம், வேப்பமரம், புளியமரம் உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகளை பசுமைப் புரட்சியின் ஒரு பகுதியாக நட்டு வைத்தார். அந்த வகையில் நடப்பட்ட புளியமரம் தற்போது காய் காத்து, பூத்துக் குலுங்கியது. இதனைக் கண்ட ஊர் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியுடன் ஒன்றுகூடி சமத்துவ பொங்கல் வைத்து வழிபாடு நடத்தினர். இந்த நிகழ்ச்சியானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மர வளர்ப்பு மற்றும் பசுமைச் சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது. மேலும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் பசுமை நாயகர் அர.சக்கரபாணி அவர்களின் பசுமை முயற்சிகளை பாராட்டி, அவ்வூர் பொதுமக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் முடிவில் மரங்களை பாதுகாத்து வளர்ப்போம், மரம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும், என்ற உறுதி மொழியினை எடுத்துக்கொண்டனர். மரக்கன்றுகள் வளர்ந்து பயனளிக்கும் நிலையை எட்டியுள்ளதை காண்பது அனைவருக்கும் பெருமையையும் மகிழ்ச்சியையும் அளித்ததாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிக்காம நாயக்கன்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.குப்புசாமி, தொப்பம்பட்டி வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வேங்கையன், ஊராட்சி செயலர் தங்கராஜ், ஊர் பொதுமக்கள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# 2026 ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு மற்றும் பிறந்தநாள் வாழ்த்து செய்தி



மதுரை, ஜன.01-

உலக மக்களின் அன்பால் கொண்டாடப்படும் 2026 ஆம் ஆண்டு புதிய வருடத்தை வரவேற்கும் விதமாக அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் மற்றும் அரசு ஊழியர்கள் ஆசிரிய பெருமக்கள் அனைவருக்கும் நம் உள்ளங்களின் மகிழ்ச்சியாக வண்ணமயமாக துள்ளி விளையாடும் குழந்தை போல் அன்பான மக்களுக்கும் சகோதரத்துவத்தை வளர்த்திட இவ்வாண்டு செவ்வானம் செழித்திட உலக மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட வரவிருக்கும் இனிய புத்தாண்டை அமைய புதுய வருட நல்வாழ்த்துக்களை தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் மாநில தலைவர் வெ. மகேந்திர குமார் தெரிவித்துள்ளார்

2026 ஆம் ஆண்டு இனிய புத்தாண்டு திருநாளை முன்னிட்டு உலக மக்களின் செல்வம் செழிக்கட்டும் அரசு ஊழியர்கள், ஆசிரிய பெருமக்கள், விவசாயிகள், நெசவாளர்கள், வியாபாரிகள். அனைவரின் வாழ்வாதாரம் செலுத்திட இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று அகவை தினம் காணும் எமது சங்க சொல்லாற்றல் செயல்வேந்தர் வெ.மகேந்திர குமார் அவர்கள் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநில தலைவர் அவர்களை வாழ்த்தி இன்று போல் என்றும் பல்லாண்டு காலம் செழுமையொடு வாழ மதுரை மாவட்டத்தின் நிர்வாகிகள் சார்பாகவும், இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மதுரை மாவட்ட தலைவர் அ. இளங்கோ தெரிவித்துள்ளார்.



# தென்காசி இராயகிரி வாசுதேவநல்லூர் பகுதிகளில் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

தென்காசி, ஜன.01-

தென்காசி மாவட்டம் ராயகிரி பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பின் கீழ் வடக்கு ரைஸ் மில் தெரு மற்றும் காளியம்மன் கோயில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலை பணிகளையும், 15வது நிதி ஆணையம் 2024 2025 ஆம் நிதி ஆண்டில் சுகாதார மானியத் திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்டும் பணிகளையும், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர் தேக்க தொட்டி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், தொடர்ந்து, வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் 2025 2026 ஆம் நிதி ஆண்டில் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் கலைஞர் காலனியில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலை, உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் கீழ் தார் சாலை மற்றும் பாலம், தேசிய சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், இராயகிரி பேரூராட்சி பொறியாளர் சிவக்குமார் மற்றும் அரசுஅலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ விருதுநகர் மாவட்டம் வத்ராயிருப்பு தாலுகாவில், மகாராஜபுரம் கிராமத்தில் சதுரகிரி புனித பாதையாத்திரை மற்றும் மாபெரும் அன்னதான விழா, வேல்யூ ரியாலிட்டி குரூப் K. மகேந்திரன் அவர்களின் தலைமையில், 31.12.2025 காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை அன்னதான நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த அன்னதான நிகழ்ச்சியில் 5000 க்கும் மேற்பட்ட பக்தர்களும் பொதுமக்களும் பங்கேற்று சிறப்பித்தனர். 15 வருடங்களாக இந்த அன்னதான நிகழ்ச்சியை K. மகேந்திரன் அவர்கள் நடத்தித் தருகிறார்கள். இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும், சிறந்த ஆன்மீக செயலுக்காகவும் இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்தித் தருகிறார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்களும் பக்த கோடிகளும் K.மகேந்திரன் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.




# திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் கணினி ஆய்வக திறப்பு மற்றும் ஆய்விதழ் வெளியீடு

திசையன்விளை, ஜன.01-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கல்லூரியில் கணினி ஆய்வக திறப்பு விழா மற்றும் ஆய்விதழ் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தொடக்கமாக கல்லூரி முதல்வர் முனைவர் து லில்லி அவர்கள் வரவேற்புரை மற்றும் தலைமை உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து உடற்கல்வி இயக்குனர் கு சந்திரசேகர் சிறப்பு விருந்தினரின் அறிமுக உரையை ஆற்றினார் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியின் இயக்குநரும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளருமான முனைவர் கி வெளியப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை கூறினார். அதனைத் தொடர்ந்து Mano journal of Commerce ஆய்வுகளின் இரண்டாம் வெளியீடு சிறப்பு விருந்தினரான முனைவர் கி.வெளியப்பன் அவர்களின் முன்னிலையில் வெளியிடப்பட்டது இந்நிகழ்ச்சியை வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் ஜெயஸ்ரீ தொகுத்து வழங்கினார் நிகழ்ச்சியின் இறுதியாக முனைவர் ஒயிட்டன் சகாயராஜ் நன்றியுரை வழங்கினார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் மற்றும் கணிதவியல் துறை பேராசிரியர் சுப்பிர மணியன் மற்றும் அனைத்து துறை பேராசிரியர்கள் அலுவலர்கள் மாணவ மாணவிகள் சிறப்பாக செய்து இருந்தனர்.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெருங்குடி வாஞ்சிநாதன் தெருவில் கடந்த சிறப்பு தீவிர திருத்தம் வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளரின் தனது பெயர் அல்லது உறவினரின் பெயர் இடம்பெறாத வாக்காளர்களுக்கு விசாரணை செய்யும் பொருட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்



# முடுவார்பட்டியில் பழனியாண்டவர் பாதயாத்திரை குழு சார்பில் திருவிளக்கு பூஜை

அலங்காநல்லூர், ஜன.01-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே முடுவார்பட்டி கிராமத்தில் ஸ்ரீ பழனியாண்டவர் முருக பக்தர்கள் பாதயாத்திரை குழுவினர் சார்பில், திருவிளக்கு பூஜை நடைபெற்றது. உலக நன்மைக்காக வேண்டியும், விவசாயம் செழிக்க வேண்டியும், அஷ்டலட்சுமிகள் அருள்புரியும் திருவிளக்கு பூஜை நடந்தது. மங்கள இசையுடன் முருகனைப் போற்றி சக்தி தீபத்தை ஏற்றினர். இதனை தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சியும் பழனி பாதயாத்திரை புறப்படும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.



# விடுதலைப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன்

மதுரை, ஜன.01-

விடுதலைப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விடுதலைப் போராட்ட வீரரும் தலைசிறந்த நாடக கலைஞருமான தியாகி விஸ்வநாததாஸ் அவர்கள் சிவகாசியை சேர்ந்த சுப்பிரமணி பண்டிதர், ஞானம்மாள் தம்பதியினருக்கு 16.06.1886 அன்று பிறந்தார். மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் வாழ்ந்து வந்தார். தேசபக்தி பாடல்கள் மற்றும் நாடகத்தின் மூலமாக பொதுமக்களிடம் தேசபற்றை ஊக்குவித்தார். தேசத்தின் விடுதலைக்காக பாடுபட்டு 29 முறை சிறை சென்றுள்ளார். 31.12.1940 அன்று காலமானார். தேசத்தின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் மாண்பை உலகறியச் செய்யும் நோக்கில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நினைவில்லம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், அன்னாரது பிறந்த நாளான ஜீன் 16ஆம் நாள் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வின்போது, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இ.சாலி தளபதி திருமங்கலம் வட்டாட்சியர் சுரேஷ் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் வா.பெ. வினோத் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் ரூ.800 மதிப்பில் பொங்கல் பொருள் தொகுப்பு - ரேஷனில் ஜன.3 முதல் விநியோகம்

புதுச்சேரி, ஜன.01-

புதுச்சேரி அரசின் சார்பில், ரூ.800 மதிப்புள்ள பொங்கல் பொருட்கள் தொகுப்பு ஜன. 3ம் தேதி முதல் விநியோகம் செய்யப்பட உள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே. ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களிலும் அரசு ஊழியர்கள். கவுரவ ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களைத் தவிர்த்து மொத்தம் 3.48 லட்சம் ரேஷன் அட்டைகளுக்கு இந்தப் பொங்கல் பரிசு தொகுப்புகள் ரேஷன் கடைகளின் வாயிலாக விநியோகம் செய்யப்படுகிறது.

இந்தத் தொகுப்பில் 4 கிலோ பச்சரிசி, 1 கிலோ நாட்டு சர்க்கரை, 1 கிலோ பாசி பருப்பு, 300 கிராம் நெய், 1 கிலோ சூரியகாந்தி எண்ணெய் ஆகியன இருக்கும். புதுச்சேரி மாநில கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு நிறுவனம் (கான்பெட்) இதைக் கொள்முதல் செய்து வழங்குகிறது. இதற்காக அரசுக்கு கூடுதலாக ரூ.26 கோடி செலவாகும். மேலும். இதில் கூட்டுறவு பால் நிறுவனமான பாண்லேவில் இருந்து நெய் விநியோகம் செய்ய அந்த நிறுவனத்துக்கு ரூ.8.75 கோடி அளிக்கப்படுகிறது.



இலவச கோதுமை: புதுச்சேரி பிராந்தியத்தில் 2,63,386 ரேஷன் கார்டுகள், காரைக்காலில் 60,225. மாஹேவில் 7,981, ஏனாமில் 15,498 என மொத்தம் 3,47,090 ரேஷன் கார்டுகள் உள்ளன. இந்த ரேஷன் கார்டுகளுக்கு புதிதாக மாதந்தோறும் 2 கிலோ இலவச கோதுமை விநியோகம் செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000